# பரிசுத்த பவுல் ஆலயம், குவைத்

# அஹமதி தமிழ் திருச்சபை

"பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்"

சங்கீதம் 4:3

செய்தி மலர்
2022
மே

இதழ் : 01
மலர் : 19



# சபை ஊழியரின் அன்பு மடல்



ராஜாதி ராஜனாம், உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் சபையின் சகோதர, சகோதரிகள், வாலிபர்கள், சிறுபிள்ளைகள் யாவரையும் அன்போடு வாழ்த்துகின்றேன். கடந்த லெந்து நாட்களிலும், ஒவ்வொரு விசேஷித்த ஆராதனைகளிலும் கர்த்தர் நாமம் மகிமை பட்டதற்காய், மற்றும் புனித வெள்ளி ஆராதனையில் சபையில் சகோதர, சகோதரிகள் இயேசு சிலுவையில் மொழிந்த ஏழு வார்த்தைகளை தெளிவாய் நமக்கு எடுத்துரைத்து நம் ஒவ்வொருவரையும் மீண்டும் ஒருவிசை கர்த்தருக்குள் திடப்படுத்திக்கொள்ள கர்த்தர் கிருபை செய்தார். பொது தேர்வுக்காக தயாராகிக் கொண்டு வருகிற நமது பிள்ளைகள் அனைவரையும் கர்த்தரின் கரத்தில் கொடுத்து அவர்களுக்காக அர்பணிப்போடு ஜெபிப்போம். "குதிரை யுத்தநாளுக்கு ஆயத்தமாக்கப்படும், ஜெயமோ கர்த்தரால் வரும்."

கலங்காததே . . . மகனே . . . மகளே . . . பரிசுத்த ஆவியினாலே உற்பவித்து, பிறந்து அநேக அதிசயங்களையும், அற்புதங்களையும், அடையாளங்களையும் செய்து சிலுவையில் அறையப்பட்டு மரித்து, உயிர்த்தெழுந்து இன்றும் பிதாவின் வலது பாரிசத்தில் வீற்றிருக்கும் நம் ஆண்டவர் நம் ஒவ்வொருவரையும் பார்த்து சொல்லுகிற, தேற்றுகிற ஒரு வார்த்தை "கலங்காதே" , ஆம் பிரியமானவர்களே நம்மை சுற்றி நடக்கின்ற, வருகின்ற எந்த சோதனையைக் குறித்தும் கலங்காதவர்களாய் இருக்க வேண்டுமென்று நம் கர்த்தர் விரும்புகின்றார். நம்மை சுற்றி கெர்ச்சிக்கிற சிங்கம் போல சாத்தான் வரலாம், ஆனால் நம்மோடு இருப்பவர் யூத ராஜ சிங்கம் என்பதை மறந்துவிடக்கூடாது.

"பர்வதங்கள் எருசலேமைச் சுற்றிலும் இருக்குமாற்போல், கர்த்தர் இது முதல் என்றென்றைக்கும் தம்முடைய ஜனத்தைச் சுற்றிலும் இருக்கிறார்" சங்கீதம் 125:2.

நாம் பரிசோதிக்கப்படும் நேரத்திலும், சஞ்சலப்படும் சமயங்களிலும் நம் விசுவாசத்தை விட்டு விலகாமலும், குன்றாமலும் உறுதியாக இருக்க வேண்டும். நம்மை அவர் தெரிந்து கொண்டுள்ளார், அவரிடம் நெருங்கி ஜெபிக்கும்போது நம்மை கலங்க விடமாட்டார்.

"பக்தியுள்ளவனைக் கர்த்தர் தமக்காகத் தெரிந்து கொண்டாரென்று அறியுங்கள்; நான் கர்த்தரை நோக்கிக் கூப்பிடுகையில் அவர் கேட்பார்". சங்–4:3.

கர்த்தரின் பிள்ளைகள் நாம் ஒரு நாளும் கலங்காமல், திகையாமல், திடமனதோடு இருக்கவேண்டும், காரனம் உலகத்தில் இருப்போனைவிட நம்மோடு இருப்பவன் பெரியவர். "பலன் கொண்டு திடமனதாயிரு, திகையாதே, கலங்காதே நீ போகும் இடமெல்லாம் உன் தேவனாகிய கர்த்தர் உன்னோடே இருக்கிறார்" –யோசுவா 1:9.

இந்த விசுவாசம் எந்நாளும் குன்றாமல் ஒவ்வொரு நாளும் பெருகிக்கொண்டே இருக்க கர்த்தர் கிருபை செய்வாராக. நாம் ஒரு நாளும் பயப்படக்கூடாது. சிலுவையில் சத்துருவின் தலையை நசுக்கியவர், ஆகவே நாம் நம்மையும், நம் பிள்ளைகளையும் சூழ இருந்து பாதுகாக்கிற தேவ தூதர்களோடு பயணிப்போம்.

"கர்த்தருடைய தூதன் அவருக்குப் பயந்தவர்களைச் சூழப் பாளயமிறங்கி, அவர்களை விடுவிக்கிறார். கர்த்தர் நமக்காக யுத்தம் செய்கிறவர்."

நம்மை சுற்றி ஆட்டுத்தோலை போர்த்திய ஓநாய்கள் பெருகி இருக்கலாம். காரணம் இன்று சமுதாயத்தில் உண்மையற்றவர்கள், தேவ பக்தியற்றவர்கள் பெருகுகிறார்கள். நாம் கர்த்தருடைய பிள்ளைகள் கலங்க கூடாது. களைகளை கர்த்தர் எடுப்பார், நாம் கனிகொடுக்கிற ஜீவியம் வாழ்வோம். "புறப்பட்டுப்போங்கள், ஆட்டுக்குட்டிகளை ஓநாய்க்குள்ளே அனுப்புகிறது போல, இதோ நான் உங்களை அனுப்புகிறேன்".

ஆனாலும் சிறுமந்தையே நாம் திகைக்க வேண்டாம், கலங்க வேண்டாம் கர்த்தர் கரம் நம்மோடு இருக்கிறது. வருகின்ற மாதத்தில் நடைபெறப்போகின்ற எல்லா ஆராதனைகள், ஜெபக்கூட்டங்கள், தாய்மார்கள் தினம், பொது மன்ற கூடுகை எல்லாவற்றிலும் கர்த்தர் நாமம் மாத்திரமே மகிமைப்பட ஜெபித்துக் கொள்வோம். அநேகர் பிரயாண காரியங்களுக்காக ஆயத்தபடுகின்றனர். எல்லோருடைய போக்கிலும் வரத்திலும் கர்த்தரின் சமூகம் அவர்களுக்கு முன்பாக சென்று எல்லாவற்றையும் ஆசீர்வதித்து நடத்த ஜெபிப்போம். கர்த்தர்தாமே நம் ஒவ்வொருவரையும் ஆசீர்வதித்து நடத்துவாராக. ஆமென்.

கர்த்தரின் பணியில்,
சகோதரர் ஜெயசேகர்

## தேவ செய்தி

கிறிஸ்துவுக்குள் அன்பான சகோதர, சகோதரிகளே எல்லாம் வல்ல இறைவன் இயேசு கிறிஸ்துவின் நாமத்தினாலே உங்களை வாழ்த்துகிறேன். ஆண்டவராகிய இயேசு கிறிஸ்து கூறினார் "மரித்தேன் ஆனாலும் இதோ சதா காலங்களிலும் உயிரோடிருக்கிறேன்" (வெளி-1:18) என்று

ஆம் பிரியமானவர்களே மரித்து உயிர்த்த இயேசு கிறிஸ்து இதோ உலகத்தின் முடிவு பரியந்தம் நம்மோடு கூட இருக்கிறார். (மத்-28:20) ஆகவே வாழ்க்கையில் எத்தனை போராட்டங்கள் வந்தாலும் எத்தனை சஞ்சலங்கள் நேரிட்டாலும் சூழ்நிலைகள் எவ்வளவுதான் எதிராக இருந்தாலும் மனங்கலங்க வேண்டாம். சதாகாலமும் உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்து நம்மோடிருக்கிறார். எல்லா சூழ்நிலைகளையும் வெற்றிகரமாக கடந்து செல்ல இயேசு நமக்கு துணை புரிவார். எப்போதும் சந்தோஷமாயிருங்கள். தீயையும் தண்ணீரையும் கடந்து வந்தோம் செழிப்பான இடத்திலே நம்மை கொண்டு வந்து விட்டார்.(சங்கீ-66:12)

இந்த தேவன் என்றென்றைக்குமுள்ள சதா காலங்களிலும் நம்முடைய தேவன். மரணபரியந்தம் நம்மை நடத்துவார். (சங்கீ-48:14) இந்த விசுவாசம் நம் ஒவ்வொருவருக்கும் இருக்க வேண்டும். தேவ மனிதர்கள் எப்படியெல்லாம் விசுவாசித்து நடந்தார்கள் என்பதை கீழ்வரும் பகுதிகளில் பார்க்கலாம்.

### 1. யோபு......

என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்றும் அவர் கடைசி நாளில் பூமியின் மேல் நிற்பார் என்றும் நான் அறிந்திருக்கிறேன். அவரை நானே பார்ப்பேன். அந்நிய கண்கள் அல்ல. என் கண்களே அவரைக் காணும். நான் என் மாம்சத்திலிருந்து தேவனை பார்ப்பேன். (யோபு-19:25-27)

தன்னுடைய மாம்சமெல்லாம் அழுகிப்போய் தன்னுடைய பத்து பிள்ளைகளும் மரித்துபோய் வீடுகள் இடிந்து விழுந்து சொத்து சுதந்திரம் எல்லாம் அற்றுப்போன சமயத்தில் யோபு பேசின விசுவாசம் நிறைந்த வார்த்தையை பாருங்கள். தன்னுடைய பாரங்களை பங்குபோட்டுக்கொள்ள கர்த்தர் இருக்கிறார் என்பதை அவன் விசுவாசித்தான். தன்னுடைய துன்ப நேரத்தில் இந்த

விசுவாசத்தினால் தன்னுடைய இருதயத்தை அவன் தேற்றிக்கொண்டான். மனைவி இகழ்ந்தாள், உற்ற நண்பர்கள் கைவிட்டனர் எல்லா சூழ்நிலையும் அவனுக்கு பாதகமாக காணப்பட்டாலும் ஒரேயொரு நம்பிக்கை உள்ளத்தை தேற்றியது. அதுதான் என் மீட்பர் உயிரோடிருக்கிறார் என்று அல்லேலூயா.

என் அன்பு சகோதர சகோதரிகளே, நீங்களும் எல்லாவற்றையும் இழந்து எதிர்காலமே கேள்விக்குறியாய் சந்தோஷம் காணல் நீராய் பிள்ளைகளின் எதிர்கால வாழ்க்கை கேள்விகுறியாய் வறுமையினால் இருளடைந்து தவிக்கிறீர்களோ? மனங்கலங்காதிருங்கள். உயிரோடிருக்கிற இயேசுகிறிஸ்து உங்களை தூக்கி நிறுத்துவார். யோபுவின் வாழ்க்கையிலும் அப்படிதான் நடந்தது. பொறுமையாய் அவன் துன்பங்களை சகித்தான். விசுவாசத்தை காத்துக்கொண்டான். ஒரு நாள் வந்தது. இரட்டிப்பான ஆசீர்வாதங்களை அவன் பெற்றுக்கொண்டான். எதையெல்லாம் இழந்தானோ? அதற்கு பதிலாக இரட்டிப்பான நன்மைகளை பெற்றுக்கொண்டான். நீங்களும் உயிரோடிருக்கிற இயேசுவை பற்றிக்கொள்ளுங்கள். உங்கள் வாழ்க்கையையும் கர்த்தர் செழிப்பாக்குவார்.

## 2.மகதலேனா மரியாள்.....

வாரத்தின் முதல்நாள் அதிகாலையிலே இயேசுவின் சரீரம் வைக்கப்பட்ட கல்லறையின் கல் புரட்டி தள்ளப்பட்டிருக்கிறதை கண்டு கலங்கி நின்றாள். அப்பொழுத அங்கு வந்த தேவ தூதர்கள் சொன்னார்கள் "உயிரோடிருக்கிறவரை நீங்கள் மரித்தோரிடத்தில் தேடுகிறதென்ன? அவர் இங்கே இல்லை அவர் உயிர்த்தெழுந்தார். ஆனாலும் மரியாள் கல்லறையின் அருகே வெளியே நின்று அழுது கொண்டிருந்தாள். அப்பொழுது இயேசு அவளை தேடி வந்தார். மரியாளே என்று அழைத்தார். நீ என் சகோதரரிடத்திற்கு போய் நான் உயிர்த்தெழுந்தேன் என்று அவர்களுக்கு நற்செய்தி சொல் என்று கூறினார். (யோவா-20:1-17) அவளும் ஓட்டமாய் ஓடி இந்த நற்செய்தியை இயேசுவின் சீடர்களுக்கு அறிவித்தாள்.

பிரியமானவர்களே, வாழ்க்கையில் ஏற்படும் பிரச்சனைகளுக்கு தீர்வு காண்பதற்கு உலகப்பிரகாரமான பரிகாரங்களை செய்ய எத்தனிக்கிறீர்களோ? உயிரோடிருக்கிற இயேசு கிறிஸ்துவை விட்டுவிட்டு மரித்துப்போன உலகத்தில் நிவாரணம் தேடுகிறீர்களோ? உயிரோடிருக்கும் இயேசுவை

நோக்கிப்பாருங்கள். அவரே உங்கள் பரிகரியாகிய கர்த்தர். அழுது புலம்பிக்கொண்டிருந்த மரியாள் இப்போது விசுவாசித்தாள். கலங்கி துவண்டுப்போயிருந்த அவளுடைய உள்ளம் இப்போது ஆறுதல் அடைந்தது. அதுமட்டுமல்ல அந்த நற்செய்தியை மற்றவர்களுக்கும் சொல்லும்படி அவள் புறப்பட்டு சென்றாள்.

அன்பு சகோதர சகோதரிகளே, அவிசுவாசத்தோடு நமக்கு யாருமே துணையில்லை என்று அழுது புரண்டது போதும். உயிரோடு எழுந்த இயேசு கிறிஸ்து உங்களையும் பேர் சொல்லி அழைக்கிறார். எதற்காக தெரியுமா?

உயிரோடிருக்கும் இயேசு கிறிஸ்துவை மற்றவர்களுக்கு சுவிசேஷமாய் அறிவித்திடவும் நம்பிக்கையில்லாமல் தவிக்கும் மற்றவர்களும் ஆறுதல் அடையும்படியாக ஆசீர்வதிக்கப்படும்படியாகவும் உங்களை சுவிசேஷர்களாய் ஆண்டவர் அழைக்கிறார். இப்போதே புறப்பட்டு செல்வோமா? கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பார்.

## 3.பவுல் அப்போஸ்தலன்.....

நான் விசுவாசிக்கிறவர் இன்னாரென்று அறிவேன் அவர் மரணத்தை பரிகரித்து ஜீவனையும் அழியாமையையும் சுவிசேஷத்தினாலே வெளியரங்கமாக்கினார். நான் அவரிடத்தில் ஒப்புக்கொடுத்ததை அவர் அந்நாள் வரைக்கும் காத்துக்கொள்ள வல்லவராயிருக்கிறார் என்று நிச்சயித்தும் இருக்கிறேன். (2-தீ-மோ-1:10-12)

அப்போஸ்தலனாகிய பவுல் உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை அறிந்திருந்ததினால்தான் எத்தனை பாடுகள் கஷ்டங்கள் அவர் வாழ்க்கையிலே குறுக்கிட்டாலும் எதைக்குறித்தும் கவலைப்படாமல் ஆண்டவருக்காக தன் உயிரையும் துச்சமென மதித்தான். அவர் அதிகமாய் அடிக்கப்பட்டார், காவலில் வைக்கப்பட்டார், அநேகந்தரம் மரண அவதியில் அகப்பட்டார். யூதர்களால் முப்பத்தொண்பது கசையடிகளை ஐந்து தரம் அடிக்கப்பட்டார். மூன்றுதரம் மிலாறுகளால் அடிபட்டார். ஒருதரம் கல்லெறியப்பட்டார். மூன்று தரம் கப்பல் சேதத்திலிருந்தார். ஒரு இராப்பகல் முழுவதும் கடலிலே நீந்தினார். அநேகப்

பிரயாணங்கள், ஆறுகள், கள்ளர்கள், சுய ஜனங்கள், அந்நிய ஜனங்கள், வனாந்திரம், சமுத்திரம் இவைகளால் உண்டான மோசங்களில் சிக்கித் தவித்தார். அநேகமுறை பிரயாசத்திலும், வருத்தத்திலும், கண் விழிப்புகளிலும், பசியிலும், தாகத்திலும், உபவாசங்களிலும், குளிரிலும், நிர்வாணத்திலும் இருந்தார். (2-கொரி-11:21-27)

இவைகள் எல்லாவற்றின் மத்தியிலும் அவர் சொன்னர் என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்றார். அவருடைய விசுவாசம் எல்லாம ஒன்றேயொன்றுதான் என் தேவன் தம்முடைய ஐசுவரித்தின்படி என் குறைவையெல்லாம் கிறிஸ்து இயேசுவுக்குள் மகிமையிலே நிறைவாக்குவார் என்பதேயாகும். (பிலி-4:13-19)

பவுல் அப்போஸ்தலன் தன்னுடைய வாழ்க்கையில் விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடினான். உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துவை அவர் கண்ணாறக்கண்டார்.அதினாலே உடல் பொருள் ஆவி எல்லாவற்றையும் கர்த்தருக்கென்று அவர் நேர்ந்துகொண்டார். அதனால் ஆண்டவருக்கு அப்போஸ்தலனாக மாறினார். தீமோத்தேயுவை பார்த்து பவுல் கூறினார் "விசுவாசத்தின் நல்ல போராட்டத்தை போராடு நித்திய ஜீவனைப் பற்றிக்கொள் அதற்காகவே நீ அழைக்கப்பட்டாய். அநேக சாட்சிகளுக்கு முன்பாக நல்ல அறிக்கை பண்ணினவனுமாய் இருக்கிறாய் என்று எல்லாவற்றையும் உயிரோடிருக்க செய்கிற தேவனுடைய சந்நிதானத்திலே உனக்கு கட்டளையிடுகிறேன்" என்று (1-தீமோ 6:12-14)

பிரியமானவர்களே யோபுவைப்போல மகதலேனா மரியாளை போல மற்றும் பவுல் அப்போஸ்தலனை போல சதா காலமும் உயிரோடிருக்கிற இயேசுவை உயிருள்ளவராய் விசுவாசிப்போம். வாழ்க்கையில் என்றும் வெற்றி பெறுவோம். சதா காலமும் ஜீவிக்கிற இயேசு கிறிஸ்து உங்கள் ஒவ்வொருவரையும் ஆசீர்வதிப்பாராக.

கிறிஸ்துவின் பணியில்
அன்பு சகோதரன்
S.ஸ்டாலின்

# வைராக்கியம் கொண்ட தேவ மனிதர்கள்

நான் என் எரிச்சலில் இஸ்ரவேல் புத்திரரை நிர்மூலமாக்காதபடிக்கு, ஆசாரியனாகிய ஆரோனின் குமாரனான எலெயாசாரின் மகன் பினெகாஸ், என் நிமித்தம் அவர்கள் நடுவில் பக்திவைராக்கியம் காண்பித்ததினால், இஸ்ரவேல் புத்திரர்மேல் உண்டான என் உக்கிரத்தைத் திருப்பினான். எண்ணகாமம் 25:11

(1)இன்றைக்கு நம்முடைய வைராக்கியம் எப்படி பட்டதாய் இருக்கின்றது என்பதை நாம் சிந்தித்துப் பார்க்க வேண்டும்.

(2)சிலர் அநீதிக்காக வைராக்கியம் கொள்கிறார்கள் ஆனால் நம்முடைய வைராக்கியமோ நீதிக்காக இருக்க வேண்டும்.

(3)எல்லாவற்றையும் விட நாம் தேவனுக்காக பக்தி வைராக்கியம் கொண்டவர்களாய் இருக்க வேண்டும்.

நீதிக்காக வைராக்கியம் கொள்வது:

நல்விஷயத்தில் வைராக்கியம் பாராட்டுவது நல்லதுதான்; அதை நான் உங்களிடத்தில் இருக்கும்பொழுதுமாத்திரமல்ல, எப்பொழுதும் பாராட்டவேண்டும்.–கலாத்தியர்(4:18)

## நல்ல விஷயம் என்றால் எது?

நீதிக்காக வைராக்கியமாக இருப்பது "கர்த்தர் நீதியுள்ளவர், நீதியின்மேல் பிரியப்படுவார்; அவருடைய முகம் செம்மையானவனை நோக்கியிருக்கிறது." சங்–11:7.

"நீதியின்மேல் பசிதாகமுள்ளவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் திருப்தியடைவார்கள்." —மத்தேயு 5:8.

## தேவன் மேல் கொள்ளும் பக்திவைராக்கியம்:

"உம்முடைய வீட்டைக்குறித்து உண்டான பக்திவைராக்கியம் என்னைப் பட்சித்தது; உம்மை நிந்திக்கிறவர்களுடைய நிந்தனைகள் என்மேல் விழுந்தது."–சங் 69:9

"என் சத்துருக்கள் உம்முடைய வசனங்களை மறந்தபடியால், என் பத்திவைராக்கியம் என்னைப் பட்சிக்கிறது." —சங் 119:139.

தாவீது கர்த்தர்மேல் கொண்ட பக்திவைராக்கியத்தை இப்படியாய் வெளிபடுத்துகிறது.

## சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ:

"நேபுகாத்நேச்சார் அவர்களை நோக்கி: சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களே, நீங்கள் என் தேவர்களுக்கு

ஆராதனைசெய்யாமலும் நான் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்ளாமலும் இருந்தது மெய்தானா ?" –தானியேல் 3:14.
அவர்கள் கர்த்தர் மேல் கொண்ட பக்திவைராக்கியத்தால் அவர்கள் சொன்ன பதில் "சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்கள் ராஜாவை நோக்கி: நேபுகாத்நேச்சாரே, இந்தக் காரியத்தைக் குறித்து உமக்கு உத்தரவு சொல்ல எங்களுக்கு அவசியமில்லை.

நாங்கள் ஆராதிக்கிற எங்கள் தேவன் எங்களைத் தப்புவிக்க வல்லவராயிருக்கிறார்; அவர் எரிகிற அக்கினிச்சூளைக்கும், ராஜாவாகிய உம்முடைய கைக்கும் நீங்கலாக்கி விடுவிப்பார்.விடுவிக்காமற்போனாலும், நாங்கள் உம்முடைய தேவர்களுக்கு ஆராதனை செய்வதுமில்லை, நீர் நிறுத்தின பொற்சிலையைப் பணிந்துகொள்வதுமில்லை என்கிறது ராஜாவாகிய உமக்குத் தெரிந்திருக்கக்கடவது என்றார்கள்.–தானியேல் 3:16,17,18.
சிறிதளவுக் கூட பயம் இல்லாமல், பதட்டப்படாமல் ராஜாவுக்கு அவர்கள் பதில் கொடுத்தார்கள். இவர்கள் பக்திவைராக்கியத்தினால் ராஜா கர்த்தரை ஏற்றுக் கொண்டார்.

"ஆதலால் சாத்ராக், மேஷாக், ஆபேத்நேகோ என்பவர்களுடைய தேவனுக்கு விரோதமாகத் தூஷணவார்த்தையைச் சொல்லுகிற எந்த ஜனத்தானும், எந்த ஜாதியானும், எந்தப் பாஷைக்காரனும் துண்டித்துப்போடப்படுவான்; அவன் வீடு எருக்களமாக்கப்படும் என்று என்னாலே தீர்மானிக்கப்படுகிறது; இவ்விதமாய் இரட்சிக்கத்தக்க தேவன் வேறொருவரும் இல்லையென்றான்." – தானியேல் 3:29.

## எலியா:

"அப்பொழுது எலியா ஜனங்களை நோக்கி: கர்த்தரின் தீர்க்கதரிசிகளில் மீந்திருக்கிறவன் நான் ஒருவன்; பாகாலின் தீர்க்கதரிசிகளோ நானூற்றைம்பதுபேர்."– 1இரா 18:22.
இரண்டு காளைகளை கொண்டுவரட்டும் ஒன்றை அவர்கள் வைக்கட்டும், மற்றொன்று நான் வைக்கிரேன்.

"நீங்கள் உங்கள் தேவனுடைய நாமத்தைச் சொல்லி கூப்பிடுங்கள்; நான் கர்த்தருடைய நாமத்தைச் சொல்லிக் கூப்பிடுவேன், அப்பொழுது அக்கினியினால் உத்தரவு அருளும் தெய்வமே தெய்வம் என்றான்; அதற்கு ஜனங்களெல்லாரும் இது நல்ல வார்த்தை என்றார்கள். – 1இரா 18:24.

"மத்தியானவேளையிலே எலியா அவர்களைப் பரியாசம்பண்ணி: உரத்த சத்தமாய் கூப்பிடுங்கள்; அவன் தேவனாமே, அவன் தியானத்தில் இருப்பான்; அல்லது அலுவலாயிருப்பான்; அல்லது
(தொடர்ச்சி 14ஆம் பக்கத்தில்) . . .

## ..உன் சந்ததியை மிகவும் பெருகப்பண்ணுவேன்..

... (ஆதி – 16:10)

## இந்த மாதம் பிறந்த நாளை சிறப்பிக்கிறவர்கள்

Sis. மரிய குளோரி தாஸ்
Sis. தேவ கிருபை
Sis. கேத்ரீனா சுகன்யா
Sis. சஜின் ஜீவா பிரான்கிளின்
செல்வி. ஹெலன் கிறிஸ்டோபர்
சகோ. ஜெபசிங்
சகோ.ஜெரேமியா
சகோ. ஸ்டீபன். T
சகோ. ஜோன்ஸ் செல்வா சிங்
செல்வி. ஏஞ்சலின் ஜெகநாதன்
Sis. எலிசபெத் ஸ்டாலின்
செல்வன். அஜாரியா பிரவீண் குமார்
செல்வி. அன்னாள் ஆசீர்வாதம்.
செல்வி. அனாஸ்டினா கமலதாசன்
Sis.ஹெலன் ஷீஜா ராபின்
செல்வி. சித்ரா ராஜன்
Sis. ஜெயலஷ்மிகொம்மையன்
செல்வன். பால் சாமுவேல் தாமஸ்
சகோ. எபிநேசர்
Sis. ஜாஸ்பர் பியூலா ஜெயக்குமார்
செல்வன்.ஜாஸ்வா ஷாஜின் ஹெக்கில்
செல்வன். டோனி ராமமூர்த்தி
சகோ. ஜோன்ஸ் ராஜ்

சகோ. கலியமூர்த்தி
சகோ. ராஜேந்திரன்
செல்வன். மில்டன் பக்தராஜ்
செல்வி. ரீமாறோஸ் எபெநேசர்
சகோ. சாமுவேல் தாசையா
Sis. தங்க மெல்பா தாசையா
செல்வன். எபின் பிரைஸ் கிருஸ்டோபர்
சகோ. தர்மர்
செல்வி. எவாஞ்சலின் சாமுவேல்
சகோ. கொமையன்
சகோ. ராஜவேல்
சகோ. ஜோஸ் யோசுவா
செல்வி. மீனா குமாரி சுகுமார்
Sis. குமதினி வில்சன்
செல்வன். ஏபெல் ராஜ் எபிநேசர்
செல்வி. மெர்ஸி தெபோரா ஆமோஸ்
சகோ. அந்தோணி சாமி
சகோ. விஜயன்
சகோ. ஞான சேகர்
செல்வி. ஜோயல் ஹெக்கில்
Sis. சுகந்தி தம்புகுமார்
சகோ. ஆசீர்வாதம்
Sis. லதா ஹெக்கில்
செல்வன். கதிரவன் சுகுமார்

## இந்த மாதம் திருமண நாளை சிறப்பிக்கிறவர்கள்

உன் சந்ததிக்குள் பூமியிலுள்ள சகல ஜாதிகளும் ஆசீர்வதிக்கப்படும் (ஆதி .22:18)

திருமதி /திரு. பெபிட் செல்பின்
திருமதி / திரு. எபிநேசர்
திருமதி / திரு. சுஜின்ஹெக்கில்
திருமதி / திரு. ஸ்டாலின்
திருமதி / திரு. வில்சன். M
திருமதி / திரு. எட்வின் சாம்
திருமதி / திரு. கிரன் குமார்
திருமதி / திரு.சுபின் சிங்
திருமதி / திரு. தாமஸ்
திருமதி/திரு.ஆன்டன்மைக்ககேல்

திருமதி / திரு. ஜோன்ஸ் ராஜ்
திருமதி / திரு. கொம்மையன்
திருமதி / திரு. ஜான் மில்லர்
திருமதி / திரு.ஆல்வின் ஜூலியஸ்
திருமதி / திரு.ஜாண்போஸ்கோ
திருமதி / திரு. எட்வர்ட் சந்தோஷ்
திருமதி / திரு. ஜெயசேகர்
திருமதி திரு. கிருஸ்டோபர்
திருமதி / திரு. வினீஷ்

# 2022 மே மாத நிகழ்ச்சி நிரல்

## ஞாயிறு ஆராதனை மாலை 5:00 முதல் 6:15 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 01/05/2022 | சகோ.ஆரோக்கிய ராஜ் | சகோ.ஃபிராங்கிளின் |
| 08/05/2022 | சகோ.டேவிட் | சகோ.ஆரோக்கிய தாஸ் |
| 15/05/2022 | சகோ.காட்லீஸ் | சகோ.எபிநேசர் |
| 22/05/2022 | சகோ.மணிராஜ் | சகோ.கிறிஸ்டோபர் |
| 29/05/2022 | சகோ.ஜான் கெட்சன் | சகோ.தாமஸ் |

## வெள்ளி ஆராதனை நேரம் மாலை 3:00 முதல் 5:00 வரை

| நாள் | ஆராதனை | செய்தி |
|---|---|---|
| 06/05/2022 | சகோ.ஜெகன்நாதன் | சகோ.சுகுமார் |
| 13/05/2022 | தாய்மார்கள் ஆராதனை | |
| 20/05/2022 | உபவாச திருவிருந்து ஆராதனை / பொது மன்ற கூட்டம் | |
| 27/05/2022 | சகோ.ஜெயசேகர் | ICC CHAPLIN |

**03/05/2022 அன்று சகோதரிகள் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:30 முதல் இரவு 8:00 மணி வரை

கூடுகையை பொருப்பெடுத்து நடத்தும் குடும்பம் – சகோதரி. ஜோன் ஆப் ஆர்க்

(வேத வினா பகுதி–நீதிமொழிகள்)

**12/05/2022 அன்று முழு இரவு ஜெபம்**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– இரவு 10:00 முதல் அதி காலை 1:00 மணி வரை

**27/05/2022 அன்று வாலிபர் ஐக்கிய கூடுகை**

இடம் – பாஹீலில் உள்ள ஜெப வீடு

நேரம்– மாலை 6:00 முதல் இரவு 8:00 மணி வரை

(வேத வினா பகுதி–தானியேல், ஓசியா )

# 2022 மே மாதத்திற்கான  வேத வினா!

**கீழ் கண்ட கேள்விகளுக்கு சரியான பதிலை வசனம் மற்றும் அதிகாரத்துடன் குறிப்பிடவேண்டும்**



1.மூடனை கொல்வது எது?

2.அகாஸ்வேரு எத்தனை நாட்கள் விருந்து வைத்தான்? அதற்கு முன் அவன் செய்தது என்ன?

3.மொர்தெகாய் எந்த கோத்திரத்தான்?

4.தூக்கத்திலும் கலங்க பண்ணுவது எது?

5.எந்த இரண்டு காரியங்களை தனக்கு செய்யவேண்டாம் என்று யோபு கேட்கிறார்? ஏதேனும் இரண்டை எழுதுக?

6.தூக்குமரம் செய்விக்க ஆலோசனை சொன்னவர்கள் யார்?

7.தன் பிள்ளைகளுக்காக யோபு செய்தது என்ன?

8.எது இரையில்லாமல் இறந்து போகும்?

9.பூரீம் எப்பொழுது ஆசரிக்கபட்டது?

10.யூதரின் அழிவுக்கு ஆமான் எதை ஈடாக்கினான்?

11.ஒரே வசனத்தை யோபும் அவன் நன்பரும் சொல்லுகிறார்கள், அது எந்த வசனம்?

12.தேவன் ………… மனுஷன் …………?

13.வானபரியந்தம் உயர்ந்தது எது?

14.யூதாவின் சத்துரு யார்?

15.காரியத்துக்கு உதவாத வைத்தியர்கள் யார்?

**விடைகளை வருகின்ற 20-05-2022க்குள் (WhatsApp #65040638) என்ற எண்ணுக்கு பெயருடன் குறிப்பிட்டு அனுப்பும்படி கேட்டுக் கொள்ளப்படுகிறீர்கள். வேதாகமத்தில் எஸ்தர் 1–10, யோபு 1–13  ஆகிய அதிகாரங்களில்  பதிலை கண்டுபிடிக்கவும்.**

– – –தேடுங்கள், அப்பொழுது கண்டடைவீர்கள்; –மத்தேயு 7:7

## 2022 –ஏப்ரல் மாத வேத வினாவுக்கு விடை

1.எருசலேம் (எஸ்றா 1:2)

2.நிசான் மாதம் (நெகேமியா 2:1)

3.சீரிய பாஷையில் (எஸ்றா 4:7)

4.யோகனான் (எஸ்றா 10:6 )

5.சன்பல்லாத், தொபிய, அரபியர்,அம்மோனியர், அஸ்தோத்தியர் (நெகேமியா 4:9)

6.அபாயாவின் புத்திரர், கோசின் புத்திரர் (நெகேமியா 7:63,64)

7.ஒரு சுரளில், மேதிய சீமையிலிருக்கிற அம்மோதா பட்டணத்தில் அரண்மனையின்

(எஸ்றா 6:2)

8.அப்பம்,திராட்சரசம், நாற்பது சேக்கல் வெள்ளி (நெகேமியா 5:15)

9.சூசான் அரண்மனையில், ராஜாவுக்கு பானபாத்திரக்காரனாயிருந்தான்.

(நெகேமியா 1:1,11)

10.நெகேமியா கர்த்தருடைய ஊழியக் காரர்கள் (நெகேமியா 2:12,20 )

11.ஐம்பத்திரண்டு (நெகேமியா 6:15)

12.பொன் வெள்ளி பணிமுட்டுகள் (நெகேமியா 5:14)

13.எஸ்றா, பாபிலோனிலிருந்து (எஸ்றா 7:1,6)

14.ஆகாய், சகரியா (எஸ்றா 5:1)

15.பன்னிரெண்டு(நெகேமியா 3:1–3,8:16,12:39)

## 2022 –ஏப்ரல் மாத வேத வினாவுக்கு பதில் எழுதியவர்கள்

Sis. சுகந்தி தம்பு குமார்
Sis.வனித்தா
Sis.செலின் டேவிட்
Sis.நித்யா ஜோன்ஸ்
Sis.விஜயா ஆண்டனி
Sis.ஷீபா அருண் இம்மானுவேல்
Sis.அனிதா ஆரோக்கியதாஸ்
Sis.மெர்ஷிலின்தயா ஏசுரெத்தினம்
Bro.பால்ராஜ்

பிரயாணம்போயிருப்பான்; அல்லது தூங்கினாலும் தூங்குவான்; அவனை எழுப்பவேண்டியதாக்கும் என்றான்." – 1இரா 18:27.

"அந்திப்பலி செலுத்தும் நேரத்திலே, தீர்க்கதரிசியாகிய எலியா வந்து: ஆபிரகாமுக்கும் ஈசாக்குக்கும் யாக்கோபுக்கும் தேவனாகிய கர்த்தாவே, இஸ்ரவேலிலே நீர் தேவன் என்றும், நான் உம்முடைய ஊழியக்காரன் என்றும், நான் இந்தக் காரியங்களையெல்லாம் உம்முடைய வார்த்தையின்படியே செய்தேன் என்றும் இன்றைக்கு விளங்கப்பண்ணும்.

கர்த்தாவே, நீர் தேவனாகிய கர்த்தர் என்றும், தேவரீர் தங்கள் இருதயத்தை மறுபடியும் திருப்பினீர் என்றும் இந்த ஜனங்கள் அறியும்படிக்கு, என்னைக் கேட்டருளும், என்னைக் கேட்டருளும் என்றான்.

அப்பொழுது "கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கி, அந்தச் சர்வாங்க தகனபலியையும், விறகுகளையும், கற்களையும், மண்ணையும் பட்சித்து, வாய்க்காலில் இருந்த தண்ணீரையும் நக்கிப்போட்டது." – 1இரா 18:36,37,38.

பெரிய ஜனக்கூட்டத்திற்க்கு நடுவிலே எலியா கர்த்தர் மேல் கொண்ட பக்திவைராக்கியமாய் நின்றார். அவருடைய பக்திவைராக்கியத்தினால் அனேகர் கர்த்தரை தெய்வமாய் ஏற்றுக் கொண்டார்கள்.

"ஜனங்களெல்லாரும் இதைக் கண்டபோது, முகங்குப்புற விழுந்து: கர்த்தரே தெய்வம் என்றார்கள்." 1இரா 18:39.

பவுல் அப்போஸ்தலர்:

"புத்தியில்லாத காலத்தியரே, நீங்கள் சத்தியத்திற்குக் கீழ்ப்படியாமற்போகத்தக்கதாக உங்களை மயக்கினவன் யார்? இயேசுகிறிஸ்து சிலுவையிலறையப்பட்டவராக உங்கள் கண்களுக்குமுன் பிரத்தியட்சமாய் உங்களுக்குள்ளே வெளிப்படுத்தப்பட்டிருந்தாரே." –கலாத்தியர் 3:1.

"ஏனெனில் இங்கே பெரிதும் அநுகூலமுமான கதவு எனக்குத் திறக்கப்பட்டிருக்கிறது; விரோதஞ்செய்கிறவர்களும் அநேகர் இருக்கிறார்கள்."– 1கொரி 16:9.

"நாங்களும் ஏன் எந்நேரமும் நாசமோசத்திற்கு ஏதுவாயிருக்கிறோம்?"

"நான் அநுதினமும் சாகிறேன்; அதை நம்முடைய கர்த்தராகிய கிறிஸ்து இயேசுவினால் உங்களைக்குறித்து, நான் பாராட்டுகிற

மேன்மையைக்கொண்டு சத்தியமாய்ச் சொல்லுகிறேன்." – 1கொரி 15:30,31.

"உங்களுக்குத் தெரிந்திருக்கிறபடி, நான் சரீர பலவீனத்தோடு முதலாந்தரம் உங்களுக்குச் சுவிசேஷத்தைப் பிரசங்கித்தேன்." – கலாத்தியர் 4:13

"நானோ நம்முடைய கர்த்தராகிய இயேசுகிறிஸ்துவின் சிலுவையைக் குறித்தேயல்லாமல் வேறொன்றையுங்குறித்து மேன்மைபாராட்டாதிருப்பேனாக; அவரால் உலகம் எனக்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறது, நானும் உலகத்திற்குச் சிலுவையிலறையுண்டிருக்கிறேன்." –கலாத்தியர் 6:14.

"ஆகையால் உங்கள்நிமித்தம் நான் அநுபவிக்கிற உபத்திரவங்களினால் நீங்கள் சோர்ந்துபோகாதிருக்க வேண்டிக்கொள்ளுகிறேன்; அவைகள் உங்களுக்கு மகிமையாயிருக்கிறதே."–எபேசியர் 3:13.

"கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம். –பிலிப்பியர் 1:21. ஏனெனில் இவ்விரண்டினாலும் நான் நெருக்கப்படுகிறேன்; தேகத்தைவிட்டுப் பிரிந்து, கிறிஸ்துவுடனேகூட இருக்க எனக்கு ஆசையுண்டு, அது அதிக நன்மையாயிருக்கும்;" –பிலிப்பியர் 1:23.

"ஆகிலும், எனக்கு லாபமாயிருந்தவைகளெவைகளோ அவைகளைக் கிறிஸ்துவுக்காக நஷ்டமென்று எண்ணினேன்." –பிலிப்பியர் 3:7.

"அவருக்காக எல்லாவற்றையும் நஷ்டமென்று விட்டேன்; குப்பையுமாக எண்ணுகிறேன்." –பிலிப்பியர் 3:11.

"சகோதரரே, நாங்கள் பட்ட பிரயாசமும் வருத்தமும் உங்களுக்கு ஞாபகமாயிருக்கும்; உங்களில் ஒருவனுக்கும் பாரமாயிராதபடிக்கு, இரவும் பகலும் நாங்கள் வேலைசெய்து, தேவனுடைய சுவிசேஷத்தை உங்களிடத்தில் பிரசங்கித்தோம்." – 1தெச 2:9.

"சகோதரரே, எங்களுக்கு நேரிட்ட எல்லா இக்கட்டிலும் உபத்திரவத்திலும் உங்கள் விசுவாசத்தினாலே உங்களைக் குறித்து ஆறுதலடைந்தோம்." – 1தெச 3:7.

"அநேகநாள் அவர்கள் போஜனம் பண்ணாம் இருந்தபோது, பவுல் அவர்கள் நடுவிலே நின்று: மனுஷரே, இந்த வருத்தமும் சேதமும் வராதபடிக்கு என் சொல்லைக்கேட்டு, கிரேத்தாதீவை விட்டுப்புறப்படாமல் இருக்கவேண்டியதாயிருந்தது."– அப்போ 27:21.

எத்தனை போராட்டங்கள், நிந்தனைகள், எதிர்ப்புகள், பரியாசங்கள், பசி, நிர்வானம், மரணத்திற்க்கு ஏதுவான காரியங்கள் பவுலின் வாழ்க்கையில் வந்தது ஆனாலும் அவர் கிறிஸ்துவின் மேல் கொண்ட பக்தி வைராக்கியம் இவை எல்லாவற்றிலும் இருந்து பாதுகாத்தது.

"கிறிஸ்துவின் அன்பைவிட்டு நம்மைப் பிரிப்பவன் யார்? உபத்திரவமோ, வியாகுலமோ, துன்பமோ, பசியோ, நிர்வாணமோ, நாசமோசமோ, பட்டயமோ?"– ரோமர் 8:36.

பவுல் கடைசியாக சொல்லுகிறார் "நல்ல போராட்டத்தைப் போராடினேன், ஓட்டத்தை முடித்தேன், விசுவாசத்தைக் காத்துக்கொண்டேன்." –2தீமோ 4:7.

## முடிவுரை:

இப்படி நாமும் கர்த்தருக்காக பக்தி வைராக்கியமாக வாழ வேண்டும். அப்படி வாழ்ந்தால் நம் மூலமாய் அனேகர் மனந்திரும்பி இரட்சிக்கப்படுவார்கள்.

பக்திவைராக்கியமாக இருப்பவர்களுக்கு கர்த்தர் கொடுக்கும் வாக்குத்தத்தம்

"ஆகையால், இதோ, அவனுக்கு என் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிடுகிறேன்."

"அவன் தன் தேவனுக்காக பக்திவைராக்கியம் காண்பித்து, இஸ்ரவேல் புத்திரருக்காகப் பாவநிவிர்த்தி செய்தபடியினால், அவனுக்கும் அவனுக்குப் பின்பு அவன் சந்ததிக்கும் நித்திய ஆசாரிய பட்டத்திற்குரிய உடன்படிக்கை உண்டாயிருக்கும் என்று சொல் என்றார்." –எண் 25:12,13.

வாலிபம் இயேசுவுக்கே

## சகோதரிகள் பகுதி

கர்த்தருடைய பரிசுத்த நாமத்திற்கு ஸ்தோத்திரமுண்டாவதாக. இந்த மே மாத செய்திமலர் மூலம் உங்களை சந்திப்பதில் மகிழ்ச்சி. "குணசாலி" என்ற தலைப்பில் ஒரு சிறிய செய்தியை வேதத்தின் மூலமாக தியானிப்போம்.

"குணசாலியான ஸ்திரீயைக் கண்டுபிடிப்பவன் யார்? அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது." நீதி 31:10

குணசாலியான ஸ்திரீக்கு எடுத்துக்காட்டு நம் வேதத்திலுள்ள ரூத் என்னும் பேர்கொண்ட பெண். கர்த்தர் அருவறுத்த, வெறுத்த சந்ததியான மோவாபிய பெண்ணான ரூத் எப்படி குணசாலியாகவும்,கர்த்தரால்

நேசிக்கப்பட்டவளாகவும், கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வம்ச வரலாற்றில் இடம் பெற்றாள்? என்பதை சுருக்கமாக பார்ப்போம் சரியான, உறுதியான தீர்மானம். ரூத் 1:6,7,8.

வாழ்க்கைப்புயலில் சிக்கிய அவள் மாமியான நகோமி தன் கணவனையும், தன் 2 குமாரரையும் இழந்து மோவாப் தேசத்தை விட்டு தான் சொந்த தேசமான யூதாதேசத்துக்கு புறப்படுகிறாள்.

அப்போது தன் இரண்டு மருமக்களான அதாவது விதவைகளான ஓர்பாள், ரூத் என்னும் தன் மருமகளை அவர்கள் தாய் வீட்டுக்கு திரும்பி போக வற்புறுத்துகிறார். வழியில் அவர்கள் சத்தமிட்டு அழுதார்கள். ஓர்பாள் தன் மாமியை முத்தமிட்டு அழுது திரும்பி போனாள். ஆனால் ரூத்தோ அவளை விடாமல் பற்றிக் கொண்டாள். இக்கட்டத்தில் தான் ரூத்தின் உறுதியான தீர்மானத்தினால் தான் அவளது சரித்திரம் சுழல தொடங்கியது. அவள் என்று விக்கிரகங்களுக்கு புறங்காட்டி இஸ்ரவேலின் தேவனை தன் அடைக்கலமாக கொண்டாளோ, அன்றே அவளது பாதை முற்றும் திரும்பியது. (ரூத் 1:16,17) அதற்கு ரூத் : நீர் போகும் இடத்திற்கு நானும் வருவேன், நீர் தங்கும் இடத்திலே நானும் தங்குவேன், உம்முடைய ஜனம் என்னுடைய ஜனம், உம்முடைய தேவன் என்னுடைய தேவன் என்றாள். அடுத்த வசனமே, அவள் மன உறுதியாயிருந்தாள் என்று சொல்கிறது.

தன்மருமக்கள் கணவரை அடையும்படிக்கே நகோமி அவர்களை தங்கள் சொந்த நாட்டிற்கு திரும்பி போகும்படி துரிதப்படுத்தினாள் ரூத் 1:8-15. இதை உணர்ந்து ரூத் ஜீவனுள்ள தேவனை ஆராதிக்கும் ஒரு கணவனை அடையும் படியாக பிடிவாதமாய் தன் மாமியை பற்றிக்கொண்டாள். இந்த உறுதியான தீர்மானமும் சரியான தெரிந்தெடுப்புமே அவளை சரியான கணவனிடத்தில் நடத்தியது இந்த உறுதியான தீர்மானம் அவளை இஸ்ரவேலின் தேவனாகிய கர்த்தருடைய செட்டைகளின் கீழ் கொண்டு வந்தது. நம்பிக்கையற்ற நிலையிலிருந்த ரூத் கர்த்தரை நம்பினதால் தேவன் அவளது தேவையை சந்தித்தார்.

பெத்லகேம் அடைந்தபின் தேவனது திட்டம் நிறைவேற காத்துக் கொண்டு ரூத் சும்மா இருக்கவில்லை. நான் வயல்வெளிக்கு போய் யாருடைய கண்களில் எனக்கு தயை கிடைக்குமோ, அவர் பிறகே கதிர்களை பொறுக்கி கொண்டு வருகிறேன் என்றாள். அதற்கு நகோமி என் மகனே, போ என்றாள். (ரூத் 2:3) ரூத் தன் சொந்த ஜனத்தையும், தான் ஆராதித்த விக்கிரகங்களையும் விட்டு தேவனிடத்திற்கு திரும்பி, மாராவை போல கசப்பான அனுபவத்தை பெற்ற தன் மாமியை விட்டு விலகாமல் அவளை போஷிக்க கதிரை பொறுக்க சென்றாள். தன் கைகளால் வேலை செய்த மருமகளை நகோமி மிகவும் நேசித்ததுமல்லாமல், மகளே என்றும் அழைத்தாள். ரூத்தின் அன்பு பிள்ளைகளை இழந்த நகோமிக்கு மறுபடியும் பிள்ளையை பெற்ற மகிழ்ச்சி பெற்றோரை விட்டு வந்த ரூத்திற்கு அம்மா கிடைத்த சந்தோஷத்தை பார்க்கமுடிகிறது.

மட்டுமல்லாமல் அவள் கதிர்பொறுக்க சென்ற வயல் தற்செயலாய் தன் மாமனாராகிய எலிமெலேக்கின் வம்சத்தானாகிய போவாசுடையதாயிருந்தது. போவாஸ் ரூத்தைப் பார்த்து இந்த பெண்பிள்ளை யாருடையவள் என்றுக் கேட்டான். மட்டுமல்லாமல் அவளை வேறே வயலுக்கு போகாமலும், இவ்விடத்தை விட்டு போகாமலும் அங்கேயே இருக்கும்படி சொன்னான். ஒருவரும் அவளை தொடாதபடிக்கு தன் வேலைக்காரருக்கு கட்டளையிட்டான். ரூத் 2:8,9.

## செய்கைக்கு தக்க பலன்:

ரூத்திற்கோ ஒரு பெரும் கேள்வி! நான் அந்நிய தேசத்தாளாயிக்க நீர் என்னை விசாரிக்கும் படி எனக்கு எதினாலே உம்முடைய கண்களில் தயை கிடைத்தது என்றாள். (ரூத் 2:10) அவள் ஒரு மோவாபிய பெண் என்பது ஊரறிந்த செய்தி. அவள் ஒரு ஏழை விதவை போவாசோ பெரிய செல்வந்தன் பின் ஏன் இப்படி ஒரு பரிவு? போவாசை கவர்ந்த அவளது பண்புகளே. ரூத் 2:10,11,12 வசனங்களை வாசித்துப்பார்த்தால், முதலாவது ரூத் குடும்பத்திலும், வேலையிலும் அவளது நன்னடத்தை, விக்கிரகங்களை விட்டு ஜீவனுள்ள தேவனிடம் திரும்பியது ரூத் 3:10 ன் படி வாலிபரின் பிறகே போகாதது இவை குறித்து அவனுக்கு விவரமாய் தெரிவிக்கப்பட்டது.

அதாவது முதலில் அவள் தனது வீட்டில் சாட்சி, இரண்டாவது சபையில் சாட்சி, மூன்றாவது நற்சான்று பெறவேண்டும் என்பதற்கு ரூத் ஒரு எடுத்துக்காட்டு.

நீ தரித்திரரும் ஐசுவரியவான்களுமான வாலிபரின் பிறகே போகாததினால் "குணசாலி" என்பதை என் ஜனமாகிய ஊராரெல்லாம் அறிவார்கள். என்றான். ரூத் 3:10,11. கிறிஸ்தவ பெண்களாகிய நம் ஒவ்வொருவரின் தலையில் எழுதப்படவேண்டிய சத்தியம் இது.

ரூத் ஜீவனுள்ள தேவனை தெரிந்து கொண்டதினாலும், தன் மாமியாரின் சொற்கேட்டு நடந்ததினாலும், தேவ சித்தத்திற்கு தன்னை ஒப்புகொடுத்தினாலும், பொறுமையாயிருந்து தேவனது வேளைக்காய் காத்திருந்ததினாலும் நல்ல ஒரு வாழ்வை பெற்றுக் கொண்டாள். போவாஸ் தன் ஊரார் அறிய ரூத்தை திருமணம் செய்து கொள்கிறான். அவள் அவனுக்கு ஒரு ஆண்பிள்ளையை பெற கர்த்தர் அநுக்ரகம் பண்ணினார். இந்த பிள்ளையின் பெயர் ஓபேத். மட்டுமல்லாமல் இந்த பிள்ளை நகோமியின் மடியிலே வளர்க்கப்படுகிறான். ஊரார் எல்லாரும் நகோமியை வாழ்த்துகிறார்கள். ஏழு குமாரரை பார்க்கிலும் உன்னை சிநேகித்த உன் மருமகள் என்று ரூத்தை வாழ்த்துகிறார்கள். இந்த ரூத் குணசாலியாக வாழ்ந்தது போல நாமும் நம்முடைய வாழ்க்கையை, திட்டங்களை, தீர்மானங்களை தேவ சித்தத்துக்கு ஒப்பு கொடும்போம். தேவன் தாமே நம்மை ஆசீர்வதிப்பாராக.

ஆமென்

# கடந்த மாத நிகழ்வுகள் தங்கள் பார்வைக்கு சில




















# ஊழியர்களுக்காக ஜெபியுங்கள்

## செயற்குழு உறுப்பினர்கள்

சபை முதன்மை ஊழியர்

**சகோ. ஜெயசேகர்**

96646444

செயலாளர்

**சகோ. இயேசு ரெத்தினம்**

23924262 - 97545812

பொருளாளர்

**சகோ. ஜெகநாதன்**

66889535 - 98852812

பெண்கள் ஐக்கிய தலைவி

**சகோதரி. எப்சிபா ஸ்டீஃபன்**

67792009 - 56640551

வாலிப ஐக்கிய தலைவர்

**சகோ. பிரசாத் சுந்தரேசன்**

60781168

Church Website Address - ahmaditamilchurch.com

Church 'E' mail ID - ahmaditamil.kw@hotmail.com

Church Postel Address

Your name - Po. Box no 46795. 64018, fahaheel ,Kuwait

தங்களது ஜெப விண்ணப்பங்கள்
எதுவாக இருந்தாலும்
எங்களுக்கு தெரிவிக்கவும்
உங்களுக்காக ஜெபிக்க
ஒரு குழு ஆயத்தமாய் இருக்கிறது.

Private Circulation only